

# காலத்தினாற் செய்த நன்றி

அனுஷா ஶ்ரீதரன்
(ஆத்ம போதா)

STEM-KALVI CHARITY

4.2

STEM-Kalvi Charity



தனியார் கல்வி நிலையத்தின் விளையாட்டு மைதானத்தில் வழமைபோல் அபி தோழிகளுடன் உதைபந்தாட்டம் விளையாடிக்கொண்டிருந்தாள்.



சிறு நேரத்திற்கு பின், ஒவ்வொருவராக தோழிகள் விடைபெற்று வீடு நோக்கி புறப்பட்டனர். ஆனால், அபியோ, மைதானத்திலிருந்த ஊஞ்சலை நோக்கி ஓடினாள்.

அவள் ஊஞ்சலில்
அமர்ந்து ஆடிக்
கொண்டும்
எண்ணிக்கொண்டும்
இருந்தாள்.





அப்போது, “அபி,
நேரமாகி விட்டது,
வீட்டுக்கு
போங்கோ” என்று கல்வி
நிலைய அதிபரின் குரல்
கேட்டது.

கால்களால் ஊஞ்சலை நிறுத்தி அதிலிருந்து அபி
இறங்கினாள்.

பின்பு, அபி புத்தகப்
பையை
எடுத்துக்கொண்-டு
பேருந்து தரிப்பு
நோக்கி நடந்தாள்.






அவள் ஏற வேண்டிய
பேருந்து 1729
வருவதைக் கண்டாள்.

நுழைவுச் சீட்டுப் பணத்தை எடுக்க சட்டை பையிற்குள்
கையை விட்டாள்.



அங்கு பணம் இருக்கவில்லை; ஒரு துவாரம் தான் இருந்தது. அபிக்கு புரிந்தது விட்டது. அவளின் பணம் அத்துவாரம் வழியே கீழே விழுந்து விட்டது .



பேருந்து தரிப்பைச் சுற்றி தரையில் பணத்தை தேடினாள். பணம் கிடைக்கவில்லை. அவள் மனதில் பயம் வரத் தொடங்கி விட்டது.




பேருந்து 1729 வந்து போயும் விட்டது. அடுத்த பேருந்து வரமுன் பணத்தைக் கண்டுபிடிக்க வேண்டும் என நினைத்தாள்.



விளையாட்டு
மைதானத்தில் பணம்
விழுந்து இருக்கலாம்
என நினைத்து அங்கு
ஓடினாள்.

ஆனால், நேரமாகி
விட்டதால்
நுழைவாயில்
பூட்டப்பட்டிருந்தது.



இப்போது அபிக்கு அழுகை வந்தது. கண்களில் நீர்
ததும்பியது.



தரையைக் கண்களால் தேடிக்கொண்டு மீண்டும் பேருந்து தரிப்பை வந்தடைந்தாள். அவளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.



பேருந்து தரிப்பில் கூட்டம் இருந்தது. ஆனால், அபிக்கு தெரிந்தவர்கள் எவரும் இருக்கவில்லை. அங்கு நின்றவர்கள் அவளைக் கவனிக்கவுமில்லை, பொருட்படுத்தவுமில்லை.



அபி அழுதபடி நின்றாள். அப்போது, ஒரு வயோதிபப் பெண்  அவளை அணுகி “ஏன் அழுகிறீர்கள்?” என அன்பாகக் கேட்டார். அபி, விம்மியபடி, தனது பேருந்துகான பணம் தொலைந்து விட்டது எனக் கூறினாள்.

அந்த வயோதிபப் பெண் அபிக்கு ஆறுதல் கூறினார். அவளுக்கு தேவையான பணத்தையும் கொடுத்தார்.





பேருந்து 1729 வந்தது. அபி, பேருந்தில் ஏறி நுழைவுச் சீட்டை வாங்கிக் கொண்டாள்.



யன்னல் ஓரமான இருக்கையில் அமர்ந்து, அபி, அந்த வயோதிபப் பெண்ணுக்கு  கை காட்டினாள். பதிலுக்கு அவரும் புன்னகையுடன் அவளுக்கு கை காட்டினார்.



ஒரு சிறு தொகையைத்தான் கொடுத்திருந்தாலும், தேவைப்படும்போது உதவி செய்த அந்த வயோதிபப்பெண், ஒரு மகத்தான மனிதனாவார்.

**காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது**

என்றார் வள்ளுவர். **(குறள் 102)**



**குறிப்பு**

அந்நியர்களுடன் பழகுவதைத் தவிர்க்கவும்.

**Publisher:** STEM-Kalvi Charity
**E-mail**: STEMkalvi@gmail.com
**Web:** WWW.STEMkalvi.org
**Writer :**Anusha Sritharan, Australia

**Book:** Kalatthinaal Seitha Nanri
(காலத்தினால் செய்த நன்றி)
**Language: Tamil**

**Reading Level**: **4.2**

**ISBN:** xxxxxxx

**Editor**: Dr K Ganesan, Founder and Director, STEM-Kalvi

This book is part of the '**1000 Reading Books**' initiative by STEM-Kalvi Charity, dedicated to creating literature for children under 10. These books aim to boost literacy rates in schools, addressing a critical need revealed in a UNICEF study conducted in 2022

**Licence:** This license enables reusers to distribute, remix, adapt, and build upon the material in any medium or format, so long as attribution is given to the creator. The license allows for commercial use.

CC BY SA



**About the writer:** Anusha was born in Colombo, Sri Lanka, and currently resides in Melbourne, Australia. She holds a PhD in Brain Imaging from Monash University in Melbourne, Australia. Currently, she is developing a math series to illustrate the broader applications of mathematics beyond traditional classrooms. She expresses her thanks to STEM KALVI for the opportunity to contribute to literacy development as part of their 1000 Reading Book Initiative and is thankful to Saravanamuthu Rajacon for his support in all her writing endeavours.

| Sub Level | 1.1 | 1.2 | 1.3 | 2.1 | 2.2 | 2.3 | 3.1 | 3.2 | 3.3 | 4.1 | 4.2 | 4.3 | 5.1 | 5.2 | 5.3 | 6.1 | 6.2 | 6.3 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Main Level | 1 | | | 2 | | | 3 | | | 4 | | | 5 | | | 6 | | |

STEM-KALVI CHARITY
Science | Technology | Engineering | Mathematics